உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

கொற்றவன்குடி

உமாபதிசிவாசாரியரருளிய

நெஞ்சுவிடுதூதுமூலம்.

அஷ்டாவதானம்

பூவை - கலியாணசுந்தரமுதலியாரவர்கள்

இயற்றிய பதவுரையும்,

இஃது,

காஞ்சிபுரம்

மகாவித்வான

கந்தசாமிமுதலியார்

மாணாக்கர்

கா. சுந்தரமூர்த்திமுதலியார்

அவர்கள் பார்வையிட்டு,

கனிகைப்போ

முருகேசமுதலியாரால்

சென்னை

ஜீவகாருண்யவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1898௵

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

சிறப்புப்பாயிரம்.

வெண்பா.

நெஞ்சுவிடு தூதினுக்கு நேரா முறையொன்று
விஞ்சையுறக் காட்டி விளக்கினான் — கஞ்சனிக
ரட்டாவ தானக்கவி யாணசுந்த ரக்கவிஞ
னெட்டாமெய்ஞ் ஞானத்தை யேய்ந்து.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

நெஞ்சுவிடு தூது.

மூலமுமுரையும்.

———()———

* காப்பு.

வேதாந்தஞ் சொற்ற வியனுருவ மூன்றினையுஞ்
சாதாக்கியமைந்திற் சான்றாக்கு-மேதாவா
மஞ்சுமுகத்தா னருளு மானைமுகத்தா னருளா
னெஞ்சுவிடு தூதுக்கினை.

(இதன்பொருள்) வேதாந்தம் - உபநிடதங்கள், சொற்ற - சொல்லிய, வியன் - பெருமைபொருந்திய, உருவமூன்றினையும் (அருவமுருவமருவுருவமென்னும்) மூன்றுருவங்களையும், சாதாக்கியமைந்தில- (சிவசாதாக்கியம் அமூர்த்திசாதாக்கியம் மூர்த்திசாதாக்கியம் கர்த்திருசாதாக்கியம் கன்மசாதாக்கியமென்னும்) ஐந்துசாதாக்கியங்களுள், சான்றாக்கும்-(அருவமானது சிவசாதாக்கியம் அமூர்த்திசாதாக்கியங்களிலும், உருவமானது கன்மசாதாக்கியம் கர்த்திருசாதாக்கியங்களிலும், அருவுருவமானது மூர்த்திசாதாக்கியத்திலும்) விளங்கக்காட்டும் மேதாவாம்- பேரறிஞனும் அஞ்சுமுகத்தான்-(ஈசானம் தற்புருடம் அகோரம் வாமதேவம் சத்தியோசாதமென்னும்) ஐந்துதிருமுகங்களையுடைய சதாசிவநாய

---

* இக்காப்புவெண்பா கொற்றவன்குடி முதலியார் கூறியதன்று இந்நூலுரையாசிரியர் பரிந்துசொற்றது,

னார், அருளால் - தந்தருளிய, ஆனைமுகத்தான் - வேழமுகக்கடவுளது, அருளால் - திருவருளாலே, நெஞ்சுவிடுதூது - (கொற்றவன்குடி உமாபதிசிவம் திருவாய்மலர்ந்தருளிய) நெஞ்சுவிடுதூது என்னும் ஞானசாத்திரத்தினை நினை - மனமே தியானம்பண்ணுவாயாக, எ-று.

நூல்.

கலிவெண்பா.

பூமேவு முந்திப் புயல்வண்ணன் பொற்பமைந்த
நாமேவு மாதுபுணர் நான்முகத்தோன் - றாமேவிப்
பன்றியு மன்னமுமாய்ப் பாரிடந்தும் வான்பறந்து
மென்றுமறியா வியல்பினான் —

(இ - ள்.) பூமேவுமுந்தி - தாமரைப்பூவினையொத்த கொப்பூழினைவாய்ந்த, புயல்வண்ணன் - மேகநிறத்தினையுடைய நாராயணமூர்த்தியும், பொற்பமைந்த - அழகுபொருந்திய, நாமேவும் - நாவினிடத்தமரும், மாது - சரஸ்வதி, புணர் - சேரும், நான்முகத்தோன் - நான்குமுகங்களைவாய்ந்த பிரமாவும், பன்றியுமன்னமுமாக - முறையே பன்றியாகியும் அன்னமாகியும், தாமேவி - தாங்கள்வடிவெடுத்து, பாரிடந்தும் - பூமியைக்கீண்டும், வான்பறந்தும் - ஆகாயத்திற்பறந்தும், என்றும் - எக்காலத்திலும், அறியா - அறியவொண்ணாத, இயல்பினான் - தன்மையினையுடையவன்,

அன்றியு
மிந்திரனும் வானோரு மேனோரு மெய்ப்புவியு
மந்தர வெற்பு மறிகடலு - மந்திரமும்
வேதமும் வேத முடிவுமவிளை விந்துவுட
னாதமுங் காணா நலத்தினான் —

(இ-ள்.) அன்றியும் - அல்லாமலும், இந்திரனும் - தேவேந்திரனும், வானோரும் - தேவர்களும், ஏனோரும் - மற்றையரும்,

எப்புவியும் - ஏந்தவுலகத்தவரும், மந்தரவெற்பும் - மந்தரமலைவாசிகளும், மறி - அலைமட்டங்கும், கடலும் - சமுத்திரவாசிகளும், மந்திரமும் - சப்தகோடிமகாமந்திரங்களும், வேதமுடி - நான்கு வேதங்களும், வேதமுடிவும் - முப்பத்திரண்டு உபநிடதங்களும் விளைவிந்துவுடன் - சுத்தமாயையிலுண்டாகிய விந்துவுடன், நாதமும் - அம்மாயையின் காரியமாகிய நாதமும், காணு - இவைகளால் காணப்படாத, நலத்திறன் - நன்மையையுடையவன்,

ஓத
வரியா னெளியா னளவிறந்து நின்ற
பெரியான் சிறியான் பெண்பாகன் —

(இ-ள்,) ஓத - எடுத்துச்சொல்ல, அரியான் - (உழுவலன்பின்றலைப்படாத அயன்முதலியதேவர்கட்கு,) அருமையானவன் எளியானை -(அன்பின்றலைப்பட்ட அடியருக்கு) எளிமையானவன், அளவிறந்து - (வைகரியாதி நால்விதவாக்கின் பகுதியவாகிய வேதமுதல் நாதமீறானவைகளுக்கு அதீதமாயச் சுட்டுணர்வுக்கெட்டாது யாங்கணும் பிரிவின்றி சமவேதமாய் நின்ற) வியாபகமாய், நின்ற - எழுந்தருளிய, பெரியான் - (அளவின்றிப்பரந்த அண்டங்களையாவும் தன்னுள் வியாப்பியமாகத் தான்வியாபகமாயெங்குநிறைந்துநின்ற) பெரியவன், சிறியான் - (மலபாகம்வருவித்தருளுதற்பொருட்டு அணுக்களாகிய உயிர்கட்குள்ளிருந்து அதிசூக்கும ஐந்தொழில்நடத்தும்) சிறியவன், பெண்பாகன் - (நிஷ்களசிவம் ஆன்மாக்களின் பேரந்தகாரமாகிய ஆணவத்தை நீக்கும்பொருட்டும் • ஆகமங்களைக் குருசந்தானத்தில் வைக்கும்பொருட்டும் அறுவகைச்சமயத்த வருமவரவர் இயானவண்ணம் அருளுதற்பொருட்டும் அருள்வடிவாகிய சத்தியின்வழியேசங்கற்பித்துநின்ற) அம்மையாரை வாமபாகத்திலுடையவன்.

தெரியா

வருவா னுருவா னருவுருவு மில்லான
மரியான மரிப்பார் மனத்தான்—

(இ-ள்) தெரியா - ஒருவராலுமறியப்படாத, அருவான் - (சிவம் சத்தி நாதம் விந்து என) அருவமானவன், உருவான் - (மகேசுரன் உருத்திரன் திருமால் அயன் என) உருவமானவன், அருவுருவம் - (சதாசிவமெனனும்) அருவுருவமாகி, இல்லான் - (நவந்தருபேதமுநாடக மாத்திரையானடிக்கும்) இவையாவுமில்லாதவன், மரியான் - இறவாதவன், மரிப்பார் - இறக்கும்பிரம விஷ்ணுக்களுடைய மனத்தான் - மனத்திலிருப்பவன்,

பரிவான

மெய்யார்க்கு மெய்யன் வினைக்குவினை யாயினான
பொய்யர்க்குப் பொய்யாய் பொய்யாயினான—

(இ-ள்) பரிவான - பக்குவப்பட்ட, மெய்யார்க்கு - உண்மையடியார்க்கு, மெய்யன் - உண்மையாய் விளங்குபவன், வினைக்கு - பிரபஞ்சகாரியங்கட்கு வினையாயினான் - நிமித்தகாரணனாயினான், பொய்யார்க்கு - உண்மையில்லார்க்கு, பொய்யாய் - இன்மையாய், பொய்யாயினான் - தோன்றாதவனாவான்.

ஐயன

படநாகம் பூண்ட பரமன் பசுவி
னிடமாய் நிறைந்த விறைவன—

(இ-ள்,) ஐயன - சர்வான்மாக்களுக்கும்பிதாவானவன், படநாகம் (தாருகாவனத்து விசாரவோமத்துண்டாக்கிவேவிய) படநாகங்களை வேகூடியபாம்புகளை பூண்ட - ஆபரணங்களாகத்தரித்த, பரமன் மேலானவன், பசுவின் - எண்ணிறந்தானமகோடிகளின், இடமாய் - இடமாகி, நிறைந்த - பூரணமாய்த்தங்கிய, இறைவன் - கடவுள்,

சுடரொளியா

னென்றுமுள னன்றளவு மியானு முளனாகி
நின்றநிலை யிற்றரித்து நில்லாமற்—

(இ-ள்) சுடரொளியான் - சோமசூரியாக்கினி சொரூபமாயுள்ளவன், என்றுமுளன் - இத்தகையமுதல்வன் எக்காலத்துமுள்ளானே, அன்றளவும் - அக்காலமுதல், யானும் பசுவாகிய நானும், உளனாகி, இருப்பவனாகி, நின்றநிலையில் - ஆன்மாவினது உண்மைச்சொரூபமாயுள்ள தன்மையில், தரித்து-நிலைபெற்று, நில்லாமல்-வாழாமல்,

சென்றுசென்று

தோற்றிய விடமண்டஞ் சுவேதசங்கண் மண்ணின்மேற்
சாற்றுமுற் பீசஞ் சராயுசங்கட்-கேற்றபிறப்
பெல்லாம் பிறந்து மிறந்து மிருவினையின்
பொல்லாங்கு துய்க்கும் பொறியிலியேன்—

(இ-ள்) சென்றுசென்று - படைப்புக்டோறும் போய்ப்போய், தோற்றி இடம்-முதல்வனாலுண்டாக்கப்பட்டு, மண்ணின்மேல் - பூமியின்மீது, சாற்றும் - சொல்லும்-அண்டம் - முட்டையிற்றோன்றுவன, சுவேதசங்கள் - வியர்வையிற்றோன்றுவன, உற்பீசம் - விதையிற்றோன்றுவன, சராயசங்கட்கு-கருவிற்றோன்றுவனவாகிய இவைகட்கு ஏற்ற-சம்பந்தமாகிய, பிறப்பெல்லாம் - எழுவகைப்பட்ட எண்பத்துநான்கு நூறாயிர யோனிகடோறும், பிறந்தும் சனித்தும், இறந்தும் மறுபடி மரித்தும், இருவினையின்-அந்தந்தச் சென்மங்கடோறும் உண்டான புண்ணியபாவங்களின் பொல்லாங்கு, தீமையை, துய்க்கு-அனுபவிக்கும், பொறியிலியேன் - அறிவிலியேன்.

கல்லா

வுணர்வின் மிசையோ டுலகாயிதனைப
புணர்வதொரு புல்லறிவு பூண்டு—

(இ-ள்,) கல்லா-பதிநூல்களைக்கல்லாத, உணர்வின் - பாசவறிவினால், மிசையோடு - மிகுந்த இகழ்ந்த, உலகாயிதனை-சாருவாகனை, புணர்வதோரு - கலந்ததொரு, புலவறிவு-சிற்றறிவு, பூண்டு கொண்டு.

கண்ணியிற

கொடிதெனவே சென்று குடிபழுதே செய்து
கடிய கொலைகளவு காமம்-படியினமிசை
தேடி யுழன்று தெரிவைத் தெரியாமல
வாடி யிடையு மனந்தனக்கு—

(இ-ள்.) கண்ணியின-அம்பினைககாட்டிலும், கொடிதெனவே-கொடுமையாகவே, சென்று-வேகமாகபபோய, குடிபழுதேசெய்து - பிறனில்விழைந்து, கடிய - அச்சமான கொலை பிறவுயிரைககொல்லல், களவு-திருடல், காமம- அன்னியமாதர் மேலிச்சை முதலியன, படியினமிசை - இவவுலகில், தேடியுழன்று - முயன்று திரிந்து தெரிவை-முதலவன்றிருவருளை, தெரியாமல் -நாடாமல், வாடி-சோமபி, இடையும - சோர்தலையடையும, மனந்தனக்கு (கருவிகளிற்றலைமையாய) மனததுக்கு.

காடியது

போன வழியோடும புக்திக்கும புத்தியுட
னூன திறலா ரகக்தைக்கும்—

(இ-ள்) நாடி - மனமானது விடயஙகளைப்பற்றி, அது- அம் மனம், போனவ்ழியோடும் - சென்றவிதத்திலே செல்லும, புக்திக்கும-ஒன்றை நிச்சயமபண்ணும் புத்திக்கும். புத்தியுடன-அப் புத்தியுடன், ஆன - பொருந்திய, திறலார், வல்லமை பொருந்திய, அகங்கைக்கும - சித்தத்திற்கும்,

மேனி

யயா வயா வழிய வழியு
முயிரின அயா முரையேன்

(இ-ள்,) மேனி-தேகமானது, அயர அயர - நாளுக்கு நாள் தளரத்தளர, அழிய அழியும் - அக்கருவிகளுடன் அம்மேனியழியும்போது. உயிரினை - ஜீவான்மாவினை துயரம் - அக்காலத்துண்டாகுந் துன்பத்தினை, உரைசெய்ன - இவ்வளவென்க் கூறேன்.

வயிரமே

கொண்டதொரு காமனுக்குங் கோபனுக்கும் மோகனுக்கு
மண்டு மதமாச்சரியனுக்கும்—

(இ-ள்,) வயிரமே விரோதமே, கொண்டதொரு, பெற்றதொரு, காமனுக்கும் ஆசையென்பவனுக்கும், கோபனுக்கும் - சிறிதுஞ்சாந்தமில்லாத கோபமென்பவனுக்கும், மோகனுக்கும் நன்மைதீமை பகுத்தறியாது மயக்குஞ்செய்யும் மோகமென்பவனுக்கும், மண்டு - மிகுந்த, மதம் - செருக்கினையுடைய, மாச்சரியனுக்கும் - பொறாமையனுக்கும்,

திண்டிறல்சே

ரிந்திரியம் பத்துக்கு மீரைந்து மாத்திரைக்கு
முந்தமிலாப் பூதங்க ளைந்தினுக்கும்—

(இ-ள்) திண்டிறல்சேர். வல்லமையே வெற்றியாக வுடைய, இந்திரியம் பத்துக்கும் மெய் வாய் கண் மூக்கு செவியாகிய ஞானேந்திரியமைந்து வாக்கு பாதம் பாணி பாயுரு உபத்தமாகிய கன்மேந்திரியமைந்து ஆக பத்துக்கும், ஈரைந்து மாத்திரைக்கும் சத்தம் பரிசம் ரூபம் ரசம் கந்தம் வசனம் கமனம் தானம் விசர்க்கம் ஆனந்தமாகிய பத்துக்கும், அந்தமிலா - முடிவில்லாத பூதங்களைந்தினுக்கும் பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாயமாகிய வைந்துக்கும்,

சிந்தைக்கவர்,

மூன்றுகுற்ற மூன்றுகுண மூன்றுமல மூன்றலத்தை
யென்றுமினைய செய்யு மிருவினைக்கும்—

(இ-ள்,) சிந்தைகலா மனத்தைக்கிளர்கின்ற, மூன்றுகுற்றம் காமம் வெகுளி மயக்கமென்னு மூன்றுகுற்றங்கள், மூன்று குணம் சாத்துவிதம் இராசதம் தாமதம் ஆகியமூன்றுகுணங்கள், மூன்று மலம் ஆணவம் கன்மம் மாயை யென்னு மும்மலங்கள், மூன்றவத்தை கேவலம் சகலம் சுத்தமென்னு மூன்றவத்தைகள், என்று நின்று பொருந்தி முறை பிறழாது புசிப்பிக்கின்ற, இருவினைகளும் புண்ணிய பாவமிரண்டினுக்கும்,

தோன்றாத

வாயுவொரு பத்துக்கு மாறாத வல்வினையே
யாயகிளைக்கு மருத்திக்கும்—

(இ-ள்,) தோன்றாத பிரத்தியக்ஷமில்லாத, வாயுவொரு பத்துக்கும் பிராணன் அபானன் உதானன் வியானன் சமானன் நாகன் கூர்மன் கிரிகரன் தேவதத்தன் தனஞ்சயன் ஆக பத்துவாயுக்களுக்கும், மாறாத விடாத வல்வினையேயாய் வலிமைபொருந்திய வினைகளேயாகிய, கிளைக்கும் உறவினருக்கும், அருத்திக்குமாகவும் வருந்தித்தேடிய செல்வத்துக்கும்,

நேயமா

மிச்சை கிரியை யிவைதரித்திங் கெண்ணிலா
வச்சங் கொடுமை யவைபூண்டு—

(இ-ள்.) நேயமாம் இவைகளின் வசமாம், இச்சை கிரியை யிவைதரித்து இச்சா ஞானக்கிரியா ரூபனாய், இங்கு இப்புவியில் எண்ணிலா அளவில்லாத, அச்சம் பயம், கொடுமை தீமை, அவைபூண்டு அவைபெற்று.

கச்சரவன

சீரினிலை நில்லாமற் றிண்டாடு பலகருவி
வாரி யகப்பட்டு மயங்கினேன்—

(இ-ள்,) கச்சரவன் அரையில் பாம்பினைக்கச்சையாகக்கொண்டமுதல்வன் திருவாய்மலர்ந்தருளிய, சீரினிலை சிறப்புப்பொ

ருந்திய ஆகமவழியில், நில்லாமல் நடவாது, திண்டாடும் அலக்கழியும், கருவிவாரி தத்துவங்களாகிய சமுத்திரத்தில் அகப்பட்டு மூழ்கி மயங்கினேனை கரைதெரியாது அலைந்தேனை,

தேருங்கால்

உன்னை யொழிய வுறவில்லை யென்னுமது
தன்னை யறிவைத் தனியறிவை—

(இ-ள்) தேருங்கால் ஆராயுங்கால், உன்னை முதல்வனாகிய தேவரீரை, ஒழிய அல்லாது உறவில்லை வேறுதுணையில்லை என்னுமது தன்னை என்று சொல்லப்பட்ட முறைமையினை, அறிவை சீவவறிவை, தனியறிவை சிவவறிவை,

முன்னம்

தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றையவ ரென்று—

(இ-ள்) முன்னம் பூர்வத்தில், தீரத் துறந்தார் விசாரித்து முழுதுந்துறந்தவர், தலைப்பட்டார் முத்தியையடைந்தவராவர், மற்றையவர் அப்படித் துறவாதவர், மயங்கி மருண்டு, வலைப்பட்டார் பிறப்பாகிய வலையில் அகப்பட்டவராவர் என்று என்ற,

நிலைத்தமிழின்

தெய்வப் புலமைத் திருவள்ளுவருரைத்த
மெய்வைத்த சொல்லை விரும்பாமல்—

(இ-ள்.) நிலைத்தமிழின் உலகத்தில் நிலைபெற்ற தமிழினுள் தெய்வப்புலமை, தெய்வத்தன்மைபொருந்திய புலமைவாய்ந்த, திருவள்ளுவர். திருவள்ளுவதேவநாயனார், மெய்வைத்தசொல்லை, உண்மையாகத் திருவாய்மலர்ந்தருளிய திருக்குறளினை, விரும்பாமல், அன்புகூடாமல்,

ஐவர்க்கு
மாவலவே செய்தங் கவாவழியைத் தப்பாமற்
பாவமெனும் பௌவப் பரப்பழுந்தி

(இ-ள்) ஐவர்க்கும், பஞ்சேந்திரியங்கட்கும் ஏவலவே, ஆனகாரியங்களினையே, செய்து முடித்து, அங்கவாவழியைத் தப்பாமல் அவைகளின் வசப்படாமல், பாவமெனும் நரகமெனும் பௌவப்பரப்பு பிறப்பாகிய சாகரத்தில் அழுந்தி முழுகி,

பூவையாத்த
கண்வலையிற் பட்டுக் கலவிக்கலையிற் பயின்றங்
குண்மை யறிவுணர்ச்சி யோராமல்-

(இ-ள்,) பூவையொத்த மாதர்களின், கண்வலையில் கண்களாகிய வலைகளில், பட்டு சிக்கி கலவிக்கலை மதனநூல் முதலியவற்றுள், பயின்று தோய்ந்து, அங்கு அவ்விடத்து, உண்மை மெய்மையாகிய அறிவு அறிவினைவிளக்கும் உணர்ச்சி கலவியை ஓராமல் ஆராயாமல்,

திண்மையினு
னாவிற் கொடுமை பலபிதற்றி நாடோறுஞ்
சாவிற் பிறப்பிற் றலைப்பட்டிங்கு

(இ-ள்) திண்மையினால் வலிமையினால் நாவில் நாவினைக்கொண்டு, கொடுமைபல அனேகமான தீயதுகளை பிதற்றி விடாது பேசி நாடோறும் எத்தினமும் சாவில் இறப்பிலும், பிறப்பில் ஜனிப்பிலும், தலைப்பட்டு எதிர்த்து இங்கு இப்புவியில்.

ஆவியிலே
நிற்கும் வகைபாராய் நிலையான நெஞ்சமே
பொறையினுடன் யானே புகலக்கேள்—

(இ-ள்) நிலையான என்னுடன் எப்போதும் நிலையாயுள்ள, நெஞ்சமே மனமே ஆவி ஆன்மாவானது நிலைநிற்கும் வகைதனையே

ப்படித்தாயிருக்கும், வகைபாராய் வித்தையையாலோசிக்கட்டு
ய், பொறியினுடன் அஃதுடன், யானே நானே, புகல்கேன் அத்
தவித்தை யுனக்குச் சொல்லுவேன் கேட்பாயாக.

வெறியின்மிசை

வந்திருக்க வல்லான் மதியாதார் வல்லரணம்
செந்தழலின் மூழ்கச் சிரித்தபிரான்—

(இ-ள்) வெறியின்மிசை-வெள்ளியங்கிரியின்மீது, வந்திருக்க எழுந்தருளியிருக்க, வல்லான் வல்லவன், மதியாதார் ஒருவரையும் வணங்காதவர்களாகிய அசுரர்களின், வல்லரணம் வலிமை பொருந்திய வெள்ளி பொன் இரும்பு முதலியவற்றாலாகிய மதிலாற் சூழப்பட்ட கோட்டைகளை, செந்தழலின் அக்கினியில் மூழ்க அழிந்துபோம்படி, சிரித்த புன்னகைசெய்த, பிரான் கடவுள்

ஆதியிலா

வேத முடிவில் விளைவில் விளைவிலொளி
யாதி யமல னிமலனருள—

(இ-ள்) ஆதியிலா முடிவிலாததேகமான, வேதம் வேதங்களின், முடிவில் அந்தத்தில், விளைவில் சத்தத்தின், விளைவில் பொருளாயிருக்கின்ற, ஒளி சோதியான, ஆதி சகலத்திற்குந் தலைமையான, அமலன் அழுக்கே மனமில்லாதவன், நிமலன் நின்மலன், அருள அருள்மயமாகிய,

போத

வறிவி லறிவை யறியு மவர்கள்
குறியுள புகுதுங் குணவன்—

(இ-ள்) போதவறிவில் ஞானமயமான வறிவின் கண்ணே, அறிவை சிவத்தை, அறியும் தரிசிக்கும், அவர்கள் சென்முத்தர்

கள், குறியுள இதயத்தில், புகுந்தும எழுந்தருளும், குணவன் இய ல்புடையவன.

நெறிகொள்

வெளியில் வெளியில வெளியன வெளியி
லொளியி லொளியி லொளியன—

(இ-ள்) நெறிகொள அடைவான வெளியில ஆகாயத்தினது வெளியில அதற்குக்காரணமான பிரகிருதியில, வெளியன அதற்காதாரமான கலா ரூபமாயுள்ளான, வெளியில அக்கலையின ஒளியில் அக்கலைக்குமேலாகிய அசுத்தமாயையில ஒளியில அதற்ப்பாற்பட்ட சுத்தவித்தையில, ஒளியன அதைக்கடந்த விந்துவிலிருப்பவன,

ஒளியி

லளியி லளியி லளிய னளியி
லளவி லளவி லளவன—

(இ-ள்) ஒளியில் அவ்வித்தையில, அளியில அவ்வித்தையைக் கடந்த சதாசிவத்தில அளியில அச்சதாசிவத்தின மேலானபரா சத்தியில, அளியன அப்பராசத்திக் காதாரமான பரசிவன, அளியின் அத்தகைய பரசிவனையினும, அளவில் எண்ணல் எடுத்தல் நீட்டல் குறுக்கல் என்பனவற்றினுக்கும், அளவில அவற்றினுக்கு மேற்பட்ட காட்சி கருதலுரைமுதலிய வற்றினுக்கும், அளவ ன அதனினுமிக்க முதனடு வீறின்மையான தனியளவினன,

அளவிறந்து

நின்றா னனைத்து நிறைந்தா னினைப்பவர்பாற்
சென்றா னறியத் தெரியாதான்—

(இ-ள்.) அளவிறந்து இவ்வளவென எல்லைப்படுத்தற் கரியனா ய், நின்றான் உள்ளவன், அனைத்தும பிரபஞ்சமுழுதும், நிறைந் தான் வியாபகமானவன், நினைப்பவர்பால் தியானிப்பவரிடத்து

சென்றான் எழுந்தருளுபவன, தெரிய ஆனையபோதத்தாலறிய தெரியாதான அறியப்படாதவன.

குன்றா

விளக்காய நிறைந்த விரிசுடரான் விண்மேற்

றுளக்காம னின்ற பெருஞ்சோதி—

(இ-ள்,) குன்றா குறைபடாத, விளக்காய தீபமாய, நிறைந்த எங்கும வியாபியான, விரிசுடரான பரவிய சோதியான, விண்மேல ஆகாயத்தில, துளக்காமல தானே பிரகாசியாது, நின்ற சோம சூரியாக்கினியாய நின்ற, பெருஞ்சோதி பெரிய வொளிரூபமாயுள்ளவன,

உளக்கண்ணுக்

கல்லாது தோன்றா வமல னகிலமெலா

நில்லாம னின்ற நிலையினான.

(இ-ள்) உளக்கண்ணுக்கு அறிவினுக்கு, அல்லாது அல்லாமல், தோன்றா புறக்கண்களுக்குக் காணாத, அமலன பரிசுத்தமானவன அகிலமெலாம சிதபிரபஞ்சமெல்லாம, நில்லாமல வேறு பிராமல, நின்ற (கண்ணொளியானம போதமபோல உடனாய நின்ற நிலையினான பூரணனாயநிறபவன.

சொல்லாரு

மீசன் பெருமை யிருவினை யென்றனக்குப

பேசுந் தகைமையெலாம பேணிககேள்—

(இ-ள்) சொல்லாரும வேதாகமங்களில் பொருந்திய, ஈசன் முதல்வனது, பெருமை மகிமைகளை, இருவினையென புண்ணிய பாவங்களிற கட்டுப்பட்ட பெத்தனாகிய நான, உனறனக்கு மண மாகிய வுனக்கு, பேசும எடுத்துசசொல்லும தகைமை யெலாம பெருமையெல்லாம, பேணிககேள் விரும்பிக்கேட்பாயாக.

பாசம்

மலமுங் கடந்து பரிந்தருளைச் சேர் பண்பாற்
குலவி விளங்குங் குணக்குன்றே—

(இ-ள்) பாசமுமலமும் ஆணவம் கன்மம் மாயையாகிய மலங்களின் காரியகாரணங்களை, கடந்து அவற்றிற் சேராது அப்பாற் சென்று, பரிந்து விரும்பி, அருள் கிருபையினை, சேர் பொருந்திய பண்பால் குணத்தினாலே, குலவி பாராட்டி விளங்கும் அடியார் இதயந்தோறும் பிரகாசிக்கும், குணக் குன்றே, நற்குணமே சொரூபமாகிய மலையானவனே,

இலகவே

செய்ய தருமச் செழுங்கிரியின் மீதிழிந்து
வையம் பரவமகிழ்ந் தெழுந்த தங்கு—

(இ-ள்) இலகவே ஒளிவிடவே, செய்ய செவ்விய, தருமப் புண்ணியமான செழுங்கிரியின்மீது அழகியமலையின்மேல் இழிந்து இறங்கி, வையம் உலகம் பரவ வணங்க, மகிழ்ந்து சந்தோஷித்து, எழுந்து எழுந்தருளி, அங்கு அவ்விடத்து,

ஐயம்

களவுபயங் காமங் கொலைகோபங் காதி
உளவிலவினை யெல்லா மழிந்திங்கு—

(இ-ள்) ஐயம் சந்தேகம், களவு திருட்டு, பயம் அச்சம், காமம் ஆசை, கொலை கொல்லல், கோபம் சினம், காதி இவைகளைக் கெடுத்து, அளவில எண்ணிறந்த, வினையெல்லாம் துன்பங்களை யெல்லாம், அழிந்து ஒழிந்து, இங்கு இவ்விடத்தில்,

உளமகிழ்த்

தேம்மெனவே யெங்கு முழங்கிச் சுருதிபாலில்
செம்மைத்து மாசமங்கள் சேர்ந்தோடி—

(இ-ள்) உளமகிழ மனமபூரிக்க, தொழுமெனவே தொம்மெ னு மகாவாக்கிய வொலியோடு, எங்கும எவவிடததும, முழங்கி ஆரவாரிதது நிறகும, சுருதி நானகு வேதஙகளிட்ததும, பயிலத நகிய செமமைதரும உணமையான ஞானததைத கொடுக்கினற ஆகமஙகள இருபததெட்டாக மஙகளில சோநதோடி தஙகியா பிநது.

மும்மலத்தின்

காட்டங்க வோபறிநதுக கல்விக கரைகடநதங
கோடுபல பூதத துணாவழிதது—

(இ-ள்) மும்மலத்தின் மூனறுமலங்களின, காடுகொடடானது அடஙக ஒஙகாதுகுளறிவிட, வோபறிநது அடியோடலைநது, கலவி அபரஞானமாகிய சமுததிரததின, கரை கரையினை கடந்து தாணடி, அஙகு அவவாவ விடஙகடகு, ஓடு தாவிசசெலலுகின்ற பலபூதநது பிருதிவி அபபு தேயு வாயு ஆகாயமெனனுமைம் பூதஙகளுடைய ஐநதுநானகு மூனறு இரணடு ஒனறு ஆகியஅவறறின் குணஙகளின, உணாவு தெளிவை, அழிதது போககி.

நீடுபுகழ்

மெய்வாய்கண மூக்குச செவியென்னப் பேர்பெற்ற
வைவாய வேடகை யவாவழிதது—

(இ-ள்) நீடுபுகழ அதிகப்புகழினை வாய்நத, மெய் வாய்கண் மூக்குச செவி யென்னப் போபெற்ற, மெய வாய் கண மூக்கு செவி யெனனும பெயாகளை வாய்நத ஞானேநதிரியஙகளாகிய-ஐ வாய ஐநது வாயிலகளினுலாய, வேடகை கிரகிககும சததபரிச ரூப ரசகந்தமென்றுய, அவா ஆசைகளை, அழிதது போக்கி

நையுமியல்

வாக்குப்பா தம்பாணி பாயுருபத் தமபலவு
நீக்கிச் செறிந்து நிறைந்தோடி —

(இ-ள்) நையுமிக்குப்படுத்தும், இயல் தன்மையினையாயுந்த, வாக்கு பாதம் பாணி பாயுரு உபத்தமபலவுமாகிய வாக்கு பாதம் பாணிபாயுரு உபத்தமென்னப்படும் கன்மேந்திரியங்களின் நீங்கி அவற்றின் செயலாகிய வசனம் கமனம் தானம் விசாக்கம் ஆனந்தமென்பனவற்றை ஒழிந்து, செறிந்து நெருங்கி நிறைந்தோடி நிரம்பிச்சென்று.

போகசரிய

பந்தமெனுஞ் சோலை பறித்துப பாந்தலைக்கு
மந்தமனம புந்தியுட னங்காரஞ்—சிந்தைவிழ

(இ-ள்.) போகசரிய தீக்ஷாவந்தகரிணையாகிய பந்தமெனும் சங்கற்பவிகற்பங்களாகிய கட்டெனும் சோலை செறிவினை பறித்து-களைந்து, பாந்து சூழ்ந்து அலைக்கும் வருத்தும் அந்த,தேகத்தினிடத்துள்ள மனம் புத்தியுடனங்காரஞ்சிந்தை அந்தக்கரணங்களாகிய மனம்புத்தி சித்தமகங்காரங்கள விழ ஒழிய.

மோதி யலைக்கு மருணீாமை முக்குணமுங்
காதி யுரோமமெலாங் கைகலந்து—

(இ-ள்,) மோதி தாக்கி அலைக்கும் வருத்தும் மருணீர்மை மயக்கவொப்புரவாயுந்த முக்குணமும் சாத்விக இராசத தாமதமாகிய முக்குணங்களையும், காதி அழித்து உரோமமெல்லாம் உடல்முழுதும கைகலந்து நிரம்பி.

சிதப்

புளக மரும்பிய புலன்மயக்கம போக்கி
விளைவில புலனமுட்ட மேவி—

(இ-ள்.) சீதம் குளிர்ச்சிபொருந்திய புளகம் மயிர்ச்சிலிர்ப்பு, அரும்பி உண்டாகி புலன் புலன்களாலுண்டாகும், மயக்கம ருளினை போக்கி தெளிந்து விளைவில அச்சமபதிப்பில, புலனறிவானது முட்ட கிட்ட, மேவி பொருந்தி.

களபத்தன

மாதர் மயக்க மழிந்துவளா மண்டலத்தின
சோதியொரு மூன்றினையுஞ் சோதித்து—

(இ-ள்,) களபம கலவைச்சந்தனத்தாற பொலிந்த, தனம் கொங்கைகளையுடைய, மாதர் ஸ்திரீகளாலுண்டாகும், மயக்கம், அறியாமையை அழிந்து நீக்கி வளர் ஓங்கிய மண்டலத்தின அக்கினிமண்டலம ஆதித்தமண்டலம சோமமண்டலங்களிலுள்ள சோதி பிரகாசங்களாகிய ஒருமூன்றினையும சோமசூரியாக்கினி மூன்றினையும, சோதித்து ஆராய்ந்து,

நீதியிற்

லாதார மாறினுஞ்சென் றுறியடல் வாயுக்கண
மீதான பத்து மிகப்பார்த்து—

(இ-ள்) நீதியினால கிரமத்தால, ஆதாரமாறினும் மூலாதாரம் சுவாதிட்டானம மணிபூரகம அநாகதம விசுத்தி ஆஞ்ஞையென்னும ஆறு ஆதாரங்களிலும சென்று போய ஆறிநிறைந்து அடல வல்லமைபொருந்திய மீதான மேலான வாயுக்கள பிராணன அபானன உதானன வியானன சமானன நாகன கூர்மன கிருகரன தேவதத்தன தனஞ்சயனென்னும, பத்தும் தசவாயுக்களும மிகப்பாரத்து மேற்கொண்டோடி,

காதிப்

பிருதிவியப்புத்தேயு வாயுவா காய
முறநிறில மைத்து மோடி—

(இ-ள்.) காதி கோபித்து, பிருதிவி யப்புத் தேயுவாயுவாகா யம் மணம் புனல் தீ காற்று வெளியெனனும் உறுதி நிலைபெற்ற நிலைமைந்து ஐந்துநிலங்களிலும், ஓடி தாவி,

மறுவிலா

நான்முகன்மா லீசன் மகேச னலஞ்சிறந்த
தானமுக மைந்தாஞ் சதாசிவமும்—

(இ-ள்.) மறுவிலா குற்றமில்லாத நான்முகன் நிவர்த்திகலைக்கதிபரான பிரமாவும் மால் பிரதிட்டா கலைக்கதிபரான நாராயணனும், ஈசன் வித்தியாகலைக்கதிபரான ருத்திரனும் மகேசன் சாந்திகலைக்கதிபரான மகேசனும் நலம் நன்மை சிறந்த சிறப்புப் பெற்ற முகமைந்தாம் ஈசானம் தற்புருடம் அகோரம் வாமம் சத்தியோசாதமெனனும் ஐந்து திருமுகங்களையுடைய சதாசிவமும் - சாந்தியாதீதகலைக்கதிபரான சதாசிவமும்,

ஆனதொரு

விந்துநா தங்கடந்த சுத்த வெறுவெளியி
லந்தமிலாப் பாழுடங்கத் தேக்கியபின்—

(இ - ள்.) ஆனதொரு - இவ்வகையாகிய கலைகட்கும் மூர்த்திகட்கும் காரணமானவொரு, விந்து - சுத்தமாயையின் மூர்த்திமுகமான பராசத்தியையும், நாதம் - சுத்தமாயையின் ஊர்த்துவமுகமான ஓசைவடிவாகிய பரநாதத்தையும், கடந்து - மேற்சென்று, சுத்த - நின்மலமான, வெறுவெளியில் - வெட்டவெளியில், அந்தமிலா - முடிவில்லாத, பாழுடங்க - சுத்தசூனியமுழுதும், தேக்கியபின் - நிறைந்தபின்,

முந்திவரு

மவ்வறிவுக் கப்பாலுஞ் சென்ற கண்டமுள்ளாக்கிச்
செவ்வறிவே யாகித் திகைப்பொழிந்த—

(இ-ள்.) முந்திவரு-ஞானபாதங்களின் முற்றபேசப்பட்ட, அவ்வறிவுக்கு-அப்பாசத்திலேவடிவினுக்கு, அப்பாலும்-அப்பாலும், சென்றகண்டம்-போயவிசாரித்த பராபரத்தை, உள்ளாகி உள்ளடங்கி செவ்வறிவேயாகி ஒரேநிலைமையான சுத்தவறிவாகி இகைப்பொழிந்து சந்தேகமில்லாது நீரத்து அங்கே அருவிட்டது.

எவ்வறிவுந்

தானேய வீடருளித் தன்னிற் பிரிவில்லா
னூனாகி யெவ்வுயிர்க்கு முட்புகுந்து—

(இ-ள்.) எவ்வறிவும் பாதாளசத்திமுடங்கிய பராபரவியாபகம் வரையிலுள்ள சேதனங்களின் ஞானங்களும், தானேய தானேயாகி வீடருளி முத்தியுங்கொடுத்து தன்னில் தன்னிடத்து, பிரிவில்லா அபின்னமானவைகட்கு, ஊனாகி திருமேனியாகி, எவ்வுயிர்க்கும் மூவகைப்பட்ட விஞ்ஞானகலா பிரளயாகலா சகலராகிய உயிர்கட்கு உட்புகுந்து உயிருக்கு உயிராய்நிறைந்து.

மேனியிலா

ரஞ்சவத்தை யுங்கடந்த தாயபெரும் பேரொளிக்கே
தஞ்சமெனச் சென்று தலைப்பெய்தி—

(இ-ள்.) மேனியிலா தத்துவங்களாலாய தேகத்திலபொருந்திய அஞ்சவத்தையும் சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி துரியம் துரியாதீதம் ஆகிய பஞ்சாவத்தைகளையும் கடந்து கடந்து, ஆய பொருந்திய, பெரும் பெரிய பேரொளிக்கே சோதிசொரூபத்திலுக்கே, தஞ்சமென அடைக்கலமென சென்று அடைந்து தலைப்பட்டு உபாயந்தேடி.

வஞ்சமற்ற

தானந்த மில்லாத தன்னொளியா லோங்கிவரு
மானந்த மென்பதோ ராறுடையான்—

(இ-ள்) தான் வஞ்சமற்ற வினையால் வேறுபாடுசெய்வதல்லது தானயாதொருபக்கல் சார்தலின்றி அந்தமில்லாத முடிவுடைய வொருபொருளாயிராது தன்னளியால் காருண்ணியத்தினால் ஓங்கி மேலுமேலும் வளர்ந்து வரும் வருகின்ற ஆனந்த மென்பதோர் நித்தியானந்த சுகமென்பதொன்றுள்ள ஆறுடையான் ஆற்றினையுடையவன்,

ஆனந்தம்

பண்ணும் பயன்சுருதி யாகமங்கள் பார்த்துணர்ந்து
நண்ண வரியதொரு நாடுடையான்—

(இ-ள்.) ஆனந்த சுரூபத்தினையே பண்ணும் செய்வதற்கு பயன் பிரயோசனமாயுள்ள சுருதி இருக்கு யசுர் சாமம் அதர்வண மென்னும் பொதுவான நான்குவேதங்களையும் ஆகமங்கள் அவ்வேதங்களின் பாஷியமாக விளங்கும் சிறப்பான ஆகமங்களையும் பார்த்து விசாரித்து உணர்ந்து உண்மையறிந்து நண்ண அடைதற்கு அரியது அருமையானதாம், ஒரு ஒப்பற்ற நாடுடையான் நாட்டினையுடையவன்,

எண்ணெண்

கலையா லுணர்ந்து கருத்தழிந்து காம
நிலையா தெலாமுன் னீத்திங்கு—

(இ-ள்.) எண்ணெண்கலையால் அறுபத்துநான்குவகைப் பட்ட அபரஞானங்களால், உணர்ந்து அறிந்து கருத்தழிந்து உண்மையினையறியாமல் நொந்து காமநிலையாதெலாம் ஆசைக்கேதுவான கீழற்ற போகத்தானங்களெல்லாவற்றையும் முன் னீத்து முன்பு நீக்கி இங்கு இவ்விடத்து.

அலைவறவே

தேட்டற்ற சிந்தை சிவஞான மோனத்தா
லோட்டற்று வீற்றிருக்கு மூருடையான்

(இ-ள்) அலைவற்றவே சலிப்பறவே தேட்டற்ற தேர்ந்தலின்றி ஒடுங்கிய சிந்தை மனம். ஆன்மாக்களிடத்திருந்த சிவஞானம் சிவஞானமாகிய மோனத்தால் மவுனநிலையில் ஒட்டுற்று போக்கு வரவற்று, வீற்றிருக்கும் அனுபூதிமயமாயப் பூரணம் பெற்றிருக்கும் ஊருடையான ஊரினையுடையவன்.

நாட்டத்தால்

தெண்ணீ ரருவிவிழச் சிந்தை மயக்கந்தெளிந்
துண்ணீர்மை யெய்தியுரோம் மெலாம—

(இ-ள்) நாட்டத்தால் கண்களினின்றும் தெண்ணீர் வீழ்ந்(து) னந்தநீர்சோர, சிந்தைமயக்கம் மனமயக்கம் தெளிந்து தெளிவு பெற்று உண்ணீர்மை மனக்களிப்பு எய்தி பெற்று உரோமமெல்லாம் மயிர்க்கால்கட்டோறும்,

நண்ணும்

புளகம் புனைமெய்யர் பொய்யிற்கூடாம
லுள்கம்பங் கொண்டுள் ளுருகி—

(இ-ள்.) நண்ணும் பொருந்தும் புளகம் சிலிர்ப்பு, புனை கொண்ட மெய்யர் அடியார்கள் பொய்யிற் கூடாமல் பிரபஞ்சத்திற் சாராமல் உள்கம்பங்கொண்டு மனநடுக்கம்பெற்று உள்ளுருகிச் சிந்தையுருகி.

அளவிலா

மாலா யிருக்கு ம்வாமனத்தை வாங்கவருண்
மேலாய விளங்கலங்கள் மெய்யினன—

(இ-ள்,) அளவிலா எல்லையில்லாத மாலாயிருக்கும் வாஞ்சையுடன் வீற்றிருக்கும் அவர் ஜீவன்முத்தர்களின் மனத்தை இருதயத்தை வாங்க தன்வயப்படுத்த, அருள் அருண்மயமான மேலாய்

விளங்கு எப்பொருட்கும் மேற்பட்டு விளங்கும் அலங்கல் மெய்யினை திருமேனியில் மாலையாகவுடையவன்,

தோலாத

வானம் புவன மலைகடலேழ் பாதாள
மூனைந்து பூதந் துயிருணர்ச்சி—

(இ-ள்) தோலாத பொருளாயக்காணப்படாத வானம் ஆகாயமும் புவனம் இருநூற்றுப்பத்து நான்கு புவனங்களும் மலை அட்டகுல பர்வதங்களும் கடல் ஏழுசமுத்திரங்களும் பாதாளம் சத்தபாதாளங்களும் ஊன் உடம்புண்டாவதற்குக் காரணமாகிய ஐந்துபூதந் பஞ்சபூதங்களும் உயிர் எண்ணிறந்த ஆன்மகோடிகளிடத்தும் உணர்ச்சி அவ்வவ்பதார்த்தங்களின் அறிவுகளுந் தக்க,

ஞானமா

யெல்லாமா யல்லவா யென்றுவா ரெண்ணாத்து
ணில்லாம னிறைந்துநீள் வாசியான—

(இ-ள்) ஞானமாய் ஞானமாகி எல்லாமாய் கலப்பினாலுடலுயிர்போல அவ்வுயிர்களேயாய் அல்லவாய் பொருட்டன்மையால் கண்களுக்கள் போல அவற்றின்வேறாய் எண்ணத்துள்ளானில் இல்லாமல் பேதமாயிராமல் நிறைந்து அபேதமாயக்கலந்துநிற்கும், நீள்வாசியான வேகமாய்ச்செல்லுங் குதிரையினையுடையவன்,

சொல்லாரும்

பாதாள மூடுருவிப் பாரேழும் விண்ணேழு
மாதார மாயெங்கு நிறைந்து—

(இ-ள்) சொல்லாரும் நூல்களிற் சொல்லப்பட்ட பாதாள மூடுருவி அதோமுக வுலகங்களைவுருவிச்சென்று, பாரேழும் மதலி

யகத்மானஎழுலகஙகளுககுமவிணணேழுமஊர்த்துவமுசமானமே லேழுலகஙகளுககும, ஆதாரமாகி நிலையாகநிறபதறகுஆதாரமாகி அகணடநிறைநது-சுததமாயாலோகமெஙகணுநிரமபி,

ஒத

வரிதா யெளிதா யருமறையா றஙகத்
துருவா யுயிரா யுணாவாய—

(இ-ள) ஒத-சுட்டிசசொலலுதற்கு, அறிதாய் காடசியிறபட, லல், எளிதாய-ஞானவானகளருளால பிதறகெளிதாய், அருமறை-அருமையானவேதஙகளும,ஆறஙகததுசிடசைகறபமவியாகரண மநிருததம சோதிடம சததமெனனும ஆறஙகஙகளின, உருவாய் ரூபமாய,உயிராய கலபபிறலை ஆனமகோடிகளாய, உணாவாய அவவுயிாகளில விளஙகும அறிவுமாததிரையாய.

பெரிதாய

வெயயதுயாப பாசமற வீசியே வெமபிறவித
துயய கடலைத துகளெழுபபி—

(இ-ள) பெரிதாய சாவவியாபியாகிய,வெயய கொடுமையானா துயா துனபிணைசசெயயும,பாசம கடடை,அறவீசியே முறறுமெ றிநது வெமபிரவி கொடியபிரப்பெனனும துயய நீராறசுததமாகிய கடலை புநவிககடலை துகளெழுபபி நீவறறிததூளெழுமபும படிசசெயது,

ஐமமூறும

காமக குரோதமதமாச்சரியங் காயநதடாததுக்
சாமத தொழிலின றலைமிதிதது—

(இ-ள)ஐயமூறும கிலேசநகிலைசசெப்புகின்ற,காமமவிருப்பம், குரோதம சினம மதம செருககும மாசசரியம பொருமையாகிய

வற்றை, காய்ந்து கோபித்து, அடர்ந்து எதிர்த்து சாமத்தொழிலின் பிரபஞ்சத்துக்குக் காரணமான புவனத்தொழிலில், மிகுந்து நசுக்கி,

நாமத்தாற

கத்துஞ் சமையக் கணங்களின் விறற் கட்டழித்துத்
தத்தம் பயங்கொலைக ளாங்கழித்தே—

(இ-ள்.) நாமத்தால் பலபெயர்களால், கத்தும்பித்தறுஞ்சமையக்கணங்களின் அகப்புறச்சமயம் புறச்சமயம் புறப்புறச்சமயம் ஆகிய முக்கூற்றுச்சமயங்களின், விறல் வலியவாதத்தினை கட்டழித்து பொய்க்கட்டுப்பாட்டை யொழித்து, தத்தம் தங்கள் தங்கள் பயம் அச்சம் கொலைகளாம் கோறலாதியாம், கழித்தே நீக்கியே

தத்திவரும்

பாசக் குழாத்தைப் படவடித்துப் பாழையாத
மாசைக் கருத்தை யறவீசி—

(இ-ள்) தத்திவரும் ஆன்மாக்களின்மீது சூழும், பாசக்குழாத்தை பிரபஞ்சவாசனைகளை படவடித்து தலையெடா தொதுக்கி பாழையாத மாதர்களின் ஆசைக்கருத்தை அவர்வயிய வெண்ணத்தை அறவீசி முற்றுநீக்கி,

நேசத்தா

லானவே கங்கொண் டருண்மும் மதத்தினு
ளானையார் தத்துவங்க ளுள்புகுந்தே—

(இ-ள்.) நேசத்தாலான அன்பாலாகிய வேகங்கொண்டு விரைவினைவாய்ந்த அருள் திருவையாம் மும்மதத்தினுடைய ஆணிசக்தி, ரோதயித்திரி என்னும் மூன்றுசத்திகளாலாய மதங்களாலானையார் உடலைக்கலந்த தத்துவங்களுள் தத்துவக் கூட்டங்களுள் புகுந்து பிரவேசித்து

தேனைப்
பருகிக் களித்துயர்ந்த பனமறைநாற் கோட்டான்
மருவித் திகழுஞான வானையான—

(இ-ள்) தேனை ஆனந்தத்தேனை பருகி குடித்து களித்து சல்லாபமடைந்து உயர்ந்த விரிட்ட பனமறை நாற்கோட்டாலபல வேதங்களை நான்குகொம்புகளாக மருவி பொருந்தி திகழ பிரகாசிக்கின்ற, ஞானவானையான பரஞான வானையினை யுடையவன.

இருமுச்
சமையங் கடந்து தனக்கொப்பிலாத
சுமைதனை நீக்குந் துவசன—

(இ-ள்) இருமுச்சமையம் அகச்சமையங்க ளாறினுக்கும் கடந்து அப்பாற்பட்டு தனக்கொப்பிலாத சமதியாகப் பொருந்துதலிலாத சுமை பிரபஞ்சபாரமாகிய துன்பம் துயரை நீக்குமொழிக்கும், துவசன கொடியினையுடையவன

கமையொன்றித்
தன்மை மறந்து தழலொளியுள் ளேயிருத்தி
யிம்மை மறுமை யிரண்டகற்றி—

(இ-ள்.) கமையொன்றி பொறுமைவாய்ந்த தம்மைமறந்து ஆணவமாகிய கனனியமானவற்றை மறந்து தழலொளி அக்குனியை உள்ளேயிருத்தி மூலாதாரத்திலெழுப்பி இம்மை மறுமை இகபரங்களின் இரண்டகற்றி இருவகைப்பட்ட வாசனைகளை அகற்றி நீக்கு.

செம்மையே
வாயுவை யோட்டா வகைநிறுத்தி வானத்து
வாயுவையு மங்கே யுறவமைத்து—

(இ-ள்.) செம்மையே சிரமமாகவே வாயுவை இடைபிங்கலைகளி லோடாவண்ணம் வெளியிற் செல்லாதவிதம் நிறுத்தித் தம்பிக்கச்செய்தது வானத்தை இவ்வாயுக்களுக்குக் காரணமாய ஆகாயத்தையும்வாயுவையும் பூதவாயுவினையும், ஆங்கே உள்ளே வாங்காதபடி உறப்பொருந்த, அமைத்து நிறுத்தி,

தேயுவா
லென்று மொருதன்மை யாயிருக்கு மின்பருளே
நின்று முழங்கு நெடுமுரசோன—

(இ-ள்,) தேயுவால் சுழுமுனை நாடியினூடாய் வாயுவினால் என்றும் - (மூலாதாரத்திற் சொல்கின்ற அக்கினியை யெழுப்பி லலாடஸ்தானத்துள்ள சந்திரமண்டலத்திற்றாக்கி யதினின்று சொட்டுமமிர்தத்தை யுண்டு) எக்காலத்தும் ஒருதன்மையாய (நரைதிரை மூப்பு மரணமுதலியவின்றி வச்சிரகாயமான) ஒரே தன்மையாகவிளங்கி, இருக்கும் எழுந்தருளியிருக்கும், இன்பருளே அன்பான திருவருளினையே நின்று நிலைபெற்று முழங்கும் சப்திக்கும் நெடுமுரசோன பேரொலியான வாத்தியமாக வுடையவன்,

அன்றியு
மாலு மயனும் வகுத்தறிந்த வையமெல்லாஞ்
சாலுமிதற் கப்பாலு மெப்பாலும்—

(இ-ள்,) அன்றியும் அல்லாமலும், அயனும் பிரமாவும் மாலும் விண்டுவும், வகுத்தறிந்த முறையே சிருட்டித்தும் காத்துமவருகின்ற வையமெல்லாம் பிரகிருதிக்குக் கீழ்ப்பட்ட உலகமெல்லாம் சாலும் மிருக்க, இதற்கப்பாலும், இப்பிரகிருதிக்கு அப்பாற்பட்ட அசுத்தமாயா புவனங்களும் எப்பாலும் மேலுமுண்டாய வுலகங்களும்,

மேலை

யுலகு முலகா லுணரவொண்ணா தூரு
மிலகி நடக்குமொழி லாணையான—

(இ-ள்) மேலையுலகும் சுத்தமாயா புவனங்களும் உலகாலி த்தகைய உலகங்களிலுள்ள எவ்வகைப்பட்டவர்த்தமாக்களாலு முணர அறிதற்கு ஒண்ணா எட்டாத, ஊரும் ஓ॥ ஊரிலையும் இலகி இவ்வுலகமெல்லா வற்றினும் விளங்கி நடக்கும் தன்னருள் நடக்கப்பெற்ற எழில் அழகுபொருந்திய ஆணையான செங்கோலுடையவன்.

அலகிறந்த

காட்சியான் காட்சிக்குங் காணாக் கலைஞான
வாட்சியா னாட்சிக்கு மாயினான—

(இ-ள்,) அலகிறந்த எண்ணிறந்த வானம்கோடிகட்குக் காட்சியான் அவரவர்கள்கொண்ட கோட்பாட்டிற்குத் தக்கபடி அருள்புரியும் பலதன்மைகளை யுடையவன் காட்சிக்கும் தற்போதமுனைந்திட்டறியுங் காட்சியினுக்கும் காணான் அறியப்படாதவன் கலைஞானம் வேதாகமமுதலிய அபரஞானங்களால் நிச்சயிக்கப்பட்ட ஆட்சியான உரிமையினையுடையவன் ஆட்சிக்கும் அவ்வேதாகமங்களால் நிச்சயிக்கப்பட்ட வுரிமையினுக்கும் ஆயினான நுண்மையானவன்.

சூட்சியான

பாருந் திசையும் படரொளியா லேநிறைந்தான்
றாருந் தலையுமிலாத் தோன்றலான—

(இ-ள்) சூட்சியான நுண்ணியன பாரும் பூமியும் திசையும் எட்டுத்திக்குகளும் படர சஞ்சரிக்கின்ற ஒளியாலே சோமசூரியாக்கினிகளாலே நிறைந்தான அவற்றினுக்குப் பிரகாசித்தினைக

கொடுத்த சிறைவினையுற்றான, தாரும ஆதியும் தலையும் அந்தமும் இலா இல்லாத தேகமுறலான அநாதி நித்தியனானவன,

வேராகி

வித்தாகி வித்தின் முளையாகி மேவுதனுச
சத்தாதி பூதங்க டானுகி—

(இ-ள்,) வித்தாகி - (தாவரங்கட்குப் பொருந்த முயிர்கட்கு முதற்காரணமான) விதையாகி' வேராகி - (அவ்விதைக்கு நிலையாய) மூலமாகி, அவ்வித்தின் - அவ்விதையின். முளையாகி - (சினையடை தளிர் முதலியனவாயக் காரியப்படுவதற்கு) அங்குரமாய், மேவும - சங்கமங்களாயப் பொருந்திய வுயிர்கட்கு, தனுச்சத்தாதி தேகமுதலிய வாதாரவாகி, பூதங்கடானுகி- (அத்தனுக்களுக்குக் காரணமான) பிருதிவியாதி பூதங்களாகி.

சுத்த

வெறுவெளியாயப் பாழாய் வெறும்பாழுக் கப்பா
லுறுபொருளாய் நின்ற வொருவன்—

(இ-ள்,) சுத்த - (இத்தகையப்பிரகிருதிகளை யதிட்டித்துக் காரியங்களை யாக்கினுனெயினும) அபரிசுத்தனாய், வெறுவெளியாய் அபரோக்ஷமாய பாழாய் பரவித்துவாய, வெறும்பாழுக்கு - பரநாதத்திற்கு அப்பால் - மேற்பட்டு உறு - பொருந்திய, பொருளாய் - திரிபுடியற்ற முதல்வனாய நின்ற - தானேதானாய நின்ற, ஒருவன் - ஒப்பற்றவன,

பொறியிலியென்

வெம்பும் பிறவியிலே வீழாமல் வீடளித்த
சம்பந்த மாமுனியென் றம்பிரான்—

(இ-ள்.) பொறியிலியென் - (மெய்யாதிப்பொறிகள் உடைத்தானவனாயினும அவற்றைத் திருவருள் மாட்டேச் செலுத்தாமை

யால் அப்பொறிகள் இனமையனைபபோன்ற வெனறு, வெம்புந்துயரவழவினுல்வாட்டுழ, பிறவியலை - பிறவிககடலில், வீழாமல்- அழுநதாமல வீடளிதது - மோட்சதலைதயருளிய, சமபநதமாமுனி சமபநதமாமுனியெனனு மருமைததிரு நாமததைபபுனைநதனதமபிரான - எனசுவாமி.

அமபுலியார்

போற்றுந்திருவடியென புனறலைமீதேபொறிததோ
னேறறினா புறததமைநத வெஙகோமான—

(இ-ள,) அமபுலியோா இவவுலகிலவாழும பெரியோாகள் போறறும - எதலும், திரு - அழகிய, அடி, பாததலைத, என - எளியேனது, புன - அறபமாகிய, தலைமீதே - சிரசினமீதில பொறிததோன - விளஙகததிடசிததவன, எறறின - (புணணியரூபமாகிய) நநதியமபெருமானது, புறதது - முதுகினமீது, அமைநது - எழுநதருளிய, எமகோமான - நமகடவுள,

சாற்றுவார்

சாற்றும்பொருளான றனிமுதலவன் றானலலான்
வேறறினப மிலலா விளஙகொளியான—

(இ-ள,) சாறறுவாா - பலசமயததவாகள, சாறறும - எடுத்துச்சொல்லும, பொருளான - (அவரவாகொணட கருததுக கிசைநத பொருளாயிருபபவன, தனிமுதல்வன - சாமனாகிதனு யிருபபவன, தானலலான - சுடடிறநதவனுயுளளவன், வேற்றினபம - பிளவுபட்டசுகததினை, இலலா - வாயககபபெறுத, விளஙகு - பிரகாசிககினற, ஒளியான - சுக சொரூபமாயப பிரகாசிக்கபபட்டவன

போற்றும்

குருவேட மாகிக குணங்குறியொன் றிலலாப
பெருவேட மாயநிறைநத பெமமான்

(இ-ள்.) போற்றும் எல்லாராலேயும் தோத்திரிக்கப்பட்ட குரு வேடமாகி (இருவினையொப்பும் மலபரிபாகமும் சத்திநிபாதமு மமைந்த சகலான்மாக்களைப் பிரட்சிக்கும் பொருட்டு) ஆசாரியக்கோலம்புனைந்து குணம் (அத்தகைய திருமேனிகொண்டானாயினும்) தனக்கென வொரு குணமுங் குறி தனக்கென வொரு அடையாள மும் ஒன்றில்லா ஏதேனுமில்லாத பெருவேடமாய பெரியகோலமாய நிறைந்த வியாபகமான பெருமான கடவுள்,

கருவேடங்

கட்டுமுருக் கட்டறுத்தான் கற்றவர்வாழ் தில்லையா
னெட்டுமவர்க் கெட்டா வியல்பினான்

(இ-ள்,) கருவேடம் (நாலாவகைத்தோற்றத்து எழுவகைப்பி றப்பினுக் காதாரமான) பிறவிக்கோலத்திற் கேதுவாய, கட்டு கன்மமுதலிய வற்றினையும், உருக்கட்டு-ஆறாறுள விளைந்த தனு வாதிகளையும், அறுத்தான் - நீக்கினவன், கற்றவர் - வேதாகமங் களிற் றேர்ந்தவர்கள், வாழ் - தங்கப்பெற்ற, தில்லையான் - சிதம் பரத்தெழுந்தருளி யிருப்பவன், எட்டுமவர்க்கு - தற்போதத்தா லனைக்கொண்டு விசாரிப்பவர்க்கு, எட்டா - அவரறியாதகன்று, இயல்பினான் தன்மையினன்,

மட்டவிழ்தார்

வானேனைப் பவனி வரக்கண்டு வல்வினையே
னேனோரு மேத்தக்கண் டேத்தினேன்—

(இ-ள்,) மட்டு - தேனைத், அவிழ் - சிந்தப்பெற்ற, தார் கொன்றைமாலையினையுடைய, வானேனை - (பெண்ணாகடத்தை த் திருப்படை வீடாகக்கொண்ட மறைஞானசம்பந்த முனியாகி ய) தேவனை, பவனிவரக்கண்டு - உலாபோதலைத் தரிசித்து, ஏ னோரும் - அனேகமான வன்மையடியார்களும், ஏத்துதல்கண்

டு - தோத்தரித்தலைப்பாதது, வலவினையேன் - வலியமலசத்தி
நுகிய நானும, எததினை - தொழுதேன்,

தீர்வென்னைப்

பாாததான பழையவினைபபஞசமலக் கொத்தையெலலா
நீததா னினைவுவே றுககினுன—

(இ - ள்.) தான - அபபெருமான, எனனை - ஏழையை, பார்த்தான - திருநோககால திடமிததான, பழைய - அநாதிசமபநத மான, வினை - வினையாகிய, பஞசமலம - ஆணவம கனமம திரோதானம மாயை மாயேயம ஆகிய ஐநதுமலஙகளின, கொத்தை - கூடடததினை எலலாம - யாவறறினையும, நீததான- சுட்டெரிததான நினைவு - என்னுடைய சீவவறிவை, வேறுக்கினு ன - சிவவறிவிற சோததிடடான,

ஏத்தரிய

தொணணூறறறுவாபபிறுககிறறுவககறுத்தான்
கணணூறு தேனமிாதங காட்டினுன—

(இ-ள்) ஏததரிய மதிததாககரிய, தொணணூறறறுவாபபில் தொணணூறறு ததது வஙகளாலாய, தொககின - உடலின துவக்கு - துனபமனைததும, அறுததான - ஒழிததான, கணணூறு தயதிருநேததிரஙகளிற றதுமபிய, தேனமிாதம - தேனினையும் அமுததத்தினையு மொதத திருவருளினை, காட்டினுன - தரிசிபபித்தான,

வெண்ணீறும்

வேடமுமபூசையுமெமெயயென்றன்பொயயென்றன்
மாடையுமம வாழ்ககைமனையுமே—

(இ-ள்.) வெண்ணீறும - விபூதியும், வேடமும் - உருத்திரா க்கமணி கல்லாடை முதலாயவேடமும பூசையுமே சிவபூசையுமே மெய்யென்றுன மோட்சவேதுவினுக்குக் காரணமாய சத்தியபதார்த்தங்களென்றுன மாடையும செல்வமும வாழ்க்கையும் பிரபஞ்சவாழ்வும மனையுமே,பெண்டிமுதலியவுமே பொய்யென்றுன நிலையில்லாத அசத்திய பதார்த்தங்களென்றுன,

நாடரிய
வஞ்செழுத்தி னுள்ளீ டறிவித்தா னஞ்செழுத்தை
னெஞ்சழுத்தி நேய மயலாக்கி—

(இ-ள.) நாடரிய - அரிதற்கரிய, அஞ்செழுத்தின் பஞ்சாக்கரத்தின, உள்ளீடு - (பதிபசுபாசமமைந்திருக்கும) உள்ளகசியத்தை, அறிவித்தான - தெரிவித்தான, அஞ்செழுத்தை பஞ்சாக்கரத்தை, நெஞ்சழுத்தி - மனமிருத்தி, நேயமயலாக்கி - அன்பாலாசைபெருக்கி,

அஞ்செழுத்தை
யுச்சரிக்குங் கேண்மை யுணர்த்தியதி லுச்சரிப்பு
வைச்சிருக்கு மந்த வழிகாட்டி

(இ-ள) அஞ்செழுத்தை - பஞ்சாக்கரத்தை, உச்சரிக்கும - (நடித்தா சிகாரமுதலாகவும அதிட்சதா நகாரமுதலாகவும) செபிக்கும, கேண்மை - சம்பந்தத்தினை, உணர்த்தி - அறிவித்து அதில - அந்தமகாமந்திரத்தில, உச்சரிப்பு - (நகாரத்தில திரோதசத்தியும, மகாரத்திலமலமும, சிகாரத்தில சிவமும, வகாரத்தில் அருளும், யகாரத்தில் ஆன்மாவுமாகநின்ற) உச்சரிப்பினை,வைச்சிருக்கும - நிலைப்பித்திருக்கும், அந்தவழி - அந்தச் சோபானமார்க்கத்தை, காட்டி - வெளிப்படுத்தி,

அச்சமறச்

சென்று விளக்கையெழத் தூண்டிச் செழுஞ்சுடரின்
றொன்றி யொருவிளக்கி னுள்ளொளியாய—

(இ-ள்) அச்சமற - மனச்சஞ்சலநீங்க, சென்று - அதோமுகமாக நோக்கி, விளக்கை - அவ்விடத்து அவ்வமையத் துண்டான தீபத்தை, எழத்தூண்டி - சிகாரவட்சரத்தைக்கொண்டு சொலிப்பித்து, செழுஞ்சுடரின் - மாட்சிமைதங்கிய சோதிரூபமாகிய அச்சிகாரத்தை, ஒன்றி - தாதான்மியமாகப் பொருந்தி, ஒருவிளக்கின் - ஒப்பற்ற தீபம்போன்ற வகாரமாகிய சத்தியினால், ஒளியாய - உள்ளே பிரகாசிப்பதாய,

நின்ற

பெருவிளக்கின் பேரொளியி னுள்ளே பிரச
மருவு மலர்போன மதித்தங்கு—

(இ-ள்) பெருவிளக்கின் - யகாரமான ஞானதீபத்தின்பேரொளியின் - பெரியசோதியின், உள்ளே - மத்தியிலே, பிரசம் - ஆனந்தத்தேன், மருவும் - பொருந்தும், மலர்போல் - தாமரைமலர்போல, மதித்து - ஒன்றைப்பாவித்து, அங்கு - அந்தக்கமலத்தில்.

உருவினுருக்

கொள்ளாவருளைக் கொளுத்திக் குணங்குறியொன்
றில்லா விடத்தே யிளைப்பாறி—

(இ-ள்) உருவில் - மாயையில், உருக்கொள்ளா - தோயாத அருளை - திருவருளினை, கொளுத்தி - அத்தாமரையிற் பிரவேசிப்பித்து, குணம் - பண்பும், குறி - அடையாளமும், ஒன்றில்

லா - ஒன்றுமில்லாத, இடத்தே - தானத்திலே, இளைப்பாறி (சென்னமர்ந்தாயமர்கிய,) சோபத்தைநீக்கி,

விள்ளாத

வுள்ள முதலாக வுற்றதெல்லாம் வாங்கவருள்
வெள்ள மயலளித்த மேவினனே—

(இ-ள்,) விள்ளாத இனிவாய்திறந்து பேசவழக்கில்லாத, உள்ளம் உயிர்முதலாக, உற்றதெல்லாம் - பொருந்திய உடல் பொருளாவியினையும், வாங்க தனதாக்கக்கொண்டு வெள்ளமயல் (அதற்குப்பதிலாக) கருணைப்பிரவாகத்திற் கிளைக்கும் களிப்பினை அளித்து தலைப்படுத்து மேவினனே என்றேடிரண்டறக் கலந்தனன்.

கள்ள

மறப்பித்தான் மெய்ஞ்ஞான மாக்கி மனமெல்லா
மிறப்பித்தா னென்பிறவி யீர்த்தான்.

(இ-ள்,) கள்ளம் எனக்குண்டாய கருமாதிகளினை, மறப்பித்தான் தலையெடாதபடி செய்தான் மெய்ஞ்ஞானம் பேரறிவினை ஆக்கி எனக்குண்டாக்கி மனமெல்லாம் மனமாதிகரணங்களையாவும் இறப்பித்தான் கெடுத்தான் என்பிறவி (தோற்றியதும் தோன்றுவதுமான,) எனது சனனங்களை ஈர்த்தான் (அவற்றிற்குக் காரணமாயிருந்த சஞ்சிதவித்தினை,) பிளந்திட்டான்,

விறற்சொல்லுக்

கெட்டானை யார்க்கு மெழுதா வியற்குணக்க
ளொட்டானை யாற்று வெழுதற்றென—

(இ-ள்.) விறல் பெருமைபொருந்திய, சொல்லுக்கு வைகரியாதிவாக்கு விகற்பங்கள் பற்றிநிகழும் வேதாதிகட்கு எட்டா

னை யெட்டாதவனும் யார்க்கும் எத்தகையினார்க்கும் எழுதா இன ணத்தன்மை யென்றெழுதவொண்ணாமல் இயல் சுபாவமான குணங்கள் குணங்கள் எட்டானும் (முடிவிலாற்றல் தன்வயத்தனாதல் இயற்கையுணர்வு முற்றுமுணர்தல் பேரருளுடைமை வரம்பிலின்பம் தூயவுடம்பு பாசங்களினீக்கமென) எட்டுடையவனும் ஆறாறு (அபரஞான முழுவதினையும்) செய்யும் எழுத்தினால் பிரணவ சொரூபியானவன்.

மட்டாரும்

பாடலா ராடலார் பண்பலா ரண்பலா
ராடலா ராட லகனபதியாம்—

(இ-ள்) மாட்டாரும் (பரதநூலின்) அளவுபொருந்திய பாட்டினால் இசைப்பாவினுக்குத் தக்கபடி ஆடலார் தாண்டவத்தைச் செய்பவர் பண்பலார் (இத்தன்மையராயினும்) தனக்கென்வோரியல்பில்லாதவர் நண்பலார் தனக்கென்வோர் விருப்பமில்லாதவர் ஆடலார் அவிநயர் ஆடல் நடனம் அகனபதியாம் எனும்பதி விசாலமான நகரமாகும்.

கூடலார்

காணக் கிடையாதான் காண்பார்க்குக்காட்சியான்
பாணர்க் கிலகு பலகையிட்டான்—

(இ-ள்) கூடலார் -(துவாத சாந்தத்தலமாகிய) திருவாலவாயுடையார் காண ஊன்மந்திரத்தாற் பார்க்கக் கிடையாதவன் கிட்டாதவன் காண்பார்க்கு அறிவால் விசாரிப்பார்க்கு காட்சியான புலப்படுபவன் பாணர்க்கு (மேற்சொன்ன திருவாலவாயென்னும்பதியில்) பாணபத்திரர்க்கு, இலகு பிரகாசிக்கின்ற பலகையிட்டான் பலகையொன்று கொடுத்தனுப்பினன்,

சேணிற்

சிறந்த வுருவான் றிருமாலுக் கெட்டா
னிறைந்த திருவுருவாய் நின்றோன் —

(இ-ள்.) சேணில் ஆகாயத்தில் மாலைக்காலத்திற் றோன்றும் செவ்வானத்தைக் காட்டிலும் சிறந்த மிக்க நிறத்தினையாய உருவான திருமேனியையுடையவன் திருமாலுக்கு (உலக முழுவதையுமளந்த நாராயணனுக்கும்) எட்டான கண்ணிக்குக் கூடாதவன் நிறைந்த சர்வ வண்டங்களிலும் வியாபகமான திருவுருவாய அழகிய சொரூபமாய் நின்றோன் எழுந்தருளியிருப்பவன்

கறங்குடனே

குறை சுழர் வண்டு சுழல்கொள்ளி வட்டமெனு
மாறில் கருணையினான் மாற்றினான் —

(இ-ள்.) கறங்குடனே (எழுவகைப்பட்ட எண்பத்து நான்கு நூறாயிர பேதமான யோனிவகைகளிலும்) காற்றாடியுடன் குறை சுழற்காற்று சுழல்வண்டு ஓட்டமிட்டுழலும்வண்டு சுழல்கொள்ளி காதத்திற் பிடித்துச் சுற்றும் கொள்ளிக்கட்டை யாகியவட்டமெனும் வகைபோல மாறிமாறிப் பிறக்கும் வேகச்சுற்றினை மாறில் லாதொரு கைம்மாறில்லாயமேலே கருணையினால் தனக்கு இயற்கையாயுள்ள கிருபையினால் மாற்றினான் நீக்கிச் சலிப்பற நிறுத்தினான்.

நிறைந்த

மெய்ய னமல னிமல னருள் வீட்டளிக்கு
மைய னறிவுக்கறி வாயினான் —

(இ-ள்.) நிறைந்த விபூதிபூத்த மெய்யான் திருமேனிவாய்த்தவன் அமலன் பரிசுத்தமானவன் நிமலன் அருளியே மனமில்லா

நவன் அருள் அருண்மயமாகிய சுத்தாத்துவித வீடு சிவசாயுச்சிய முத்தியினை அளிக்கும், பாலிக்கும் ஐயன முனைஞன் அறிவுக்கு ஆனமகோடிகளின் சிற்றறிவினுக்கு அறிவால அவற்றைப் பிரேரேபிக்கும பேரறிவுடையவனும் ஆயினன் விளங்கினான்,

பொய்யர்பாற்
பொய்ம்மையாய நின்றான் புரிந்தவாதநெஞ்சத்துண்
மெய்ம்மையாய் நின்று விளங்கினான்—

(இ-ள்.) பொய்யர்பால அஞ்ஞானிகளிடத்து பொய்ம்மையாய் சூனியமாய நின்றான மறைந்திருப்பவன், புரிந்தவாதம் வழிபட்டார்களது, நெஞ்சத்துள மனதினகண்ணே மெய்ம்மையாயசத்தியமாய நின்று எழுந்தருளி விளங்கினான் தோன்றினான்,

கைம்மழுவா
னத்தன்பா னீசென் றடையுமிடத் தையெலஞ்
சித்தஞ்சேர் நெஞ்சமே செப்பக்கேள்—

(இ-ள்,) கைம்மழுவான (அத்தகையனாயினும்) திருக்கரத்தில் மழுவாயுதத்தையுடையவன், அத்தனபால (இத்தகைய) சுவாமியினிடத்து நீசென்று நீபோய அடையும சேரும்போது இடத்தையெல்லாம (வழியில பல்விடையூறுகளை விளைவிக்கும்) இடங்களையெல்லாம சித்தஞ்சேர அந்தக்கரணங்களின பாற்பட்டநெஞ்சமே மனதே செப்பக்கேள் நான் சொல்லுவதைக் கேட்பாயாக,

நித்தலுமே
பூசிமுடித் துண்டுடுத்துப் பூங்குழலார்தங்கலவி
யாசைதனிற் படிவப வாகலிக்கு—

(இ-ள்,) நித்தலுமே நாடோறுமே பூசி சந்தனகஸ்தூரிகளைப்பூசி முடித்து பரிமள புட்பங்களைச்சூடி உடுத்து பட்டு பீதாம்

பரமதரித்து உண்டு அறுவகைச் சுவையுடனகூடிய நாலவகைப் புசிபபினைப புசிததுப் பூவருகுழலாரதம-மலரணிநத கூநதலையுடை யமாதாகளது கலவி புணாசசியாகிய ஆசைதனில மோகததில் பட்டு கட்டுபபடடு இனபவாரகலிககு இனபசமுததிரததில

நேசமுற

நினறு திளைககு மிதுமுத்தி யலலதுவே

றொனறு திளைககு மதுமுதத யனறெனறு

(இ-ள்) நேசமுற ஆசைபொருநத நினறு நிலையாக விருநது திளைககும (பிரததியட்சமாக) அனுபவிககும, இதுமுததி, இது வே உணமையான மோட்சமாம அலலது இதுவலலாமல்வேறொ னறு (ஆன்மா பரமானமா வுணடெனறும நரகமோட்ச முண டெனறும் அனுமானவாகம வாதிகளாறபேசும) வேறுவிதமாக வொன்றுகூறி திளைககும அனுபவிககும அதுமுததி அது உண மையான மோட்சம அனறு அலலவாம எனறு இவவிதமாகக் கூறி,

இலகா விருளலதை போலிகலே பேசு

முலகா யுதனபா லுறுதே—

(இ-ள்,) இலகா வாழநத இருள் அஞ்ஞானததை வாய்நதஅ லதைபோல பேயைபபோல இகலே குறறமே பேசும பிதறறுகி னற உலகாயுதன் சாருவாகனிடததில உறுதே அவன வலையிற் படாதே,

பலகாலுங்

தாயபிரயக் கண்டவர்போற் றம்மைக்கண்டாலகதுவே

காணபிரம மெனபவாபா லண்ணுதே—

(இ-ள்,) புலகாலும் எந்தவேளையும் தாம் ஆன்மாவாகியதன்னையும் பிரமம பரமான்மாவாகிய பரத்தினையும், கண்டவர்போல் விசாரித்திரண்டற வனுபவிக்கும் சீவன் முத்தர்களைப்போல, தமமைககணடு - கருவிகளை நீக்கததுஆன்மாவாகிய தன்னைத்தரிசித்து, ஆங்கதுவே,அங்ஙனம தரிசித்தநிலையிலேயே திருத்தியடைந்து, நான்பிரமம - அகம்பிரமம, எனபவர்பால்-என்றுசாதிககுமயா வாதியாகளிடத்தில,நண்ணுதே-அவாமயககிலமயஙகாதே

கொன்றிடுவதெலலாங கொலையல்லவென்று குறித்
தென்றுமற மேதெயவ மெனறென்று - வென்றி

(இ-ள்,) ஊனறனககு - தேகத்தினை வளாககும பொருட்டாக் கொன்றிடுவதெல்லாம மிருகாதிகளைககொலை, செயதுண்ணுவதெல்லாம கொலை யலலவென்று பாவமாகாதென குறித்துநோமானித்து என்றும எககாலத்தும அறமே புண்ணியமேதெய்வமென்று கடவுளெனககூறி என்றும வென்றி இததலைக்யபுண்ணியத்தினில செயமடைந்து,

பொறையேயெனும்புத்தனபொல்லாத புன்சொல்
மிறையே விருமபி விழாதே—

(இ-ள்,) பொறையே (நட்புபகையிரண்டிலும் விருப்புவெறுப்பின்றி) பொறுமையாகவிருத்தலே எனும முத்தியெனச சாதிக்கும், புத்தன பௌத்தமததினனது, பொல்லாத தீமையாகிய புன்சொல் அறபசசொலலாம மிறையே குற்றத்தினையே விருமபி நாடி விழாதே அத்தமோறறத்தி லுழையாதே,

நிறைமேவி

வாழ்பவர்போல்மன் னுடலின்மன் னுரோமம்பறித்துத்
தாழ்வுநினை யாதுதுகி லுணகாறி—

(இ-ள்,) நிறைமேவி (ஒருயிர்க்கு துன்பத்தைச்செய்யப்படா தெனும்) மாட்சிமையினையடைந்து, வாழ்பவர்போல வாழுகின்றவர்களைப்போ னடித்து மன்னுடலில தனக்குநிலையான தேகத்தில் மனனும தங்கும உரோமம உரோமங்களை பறித்து பிடுங்கி தாழ்வுநினையாது உயிர்களையிம்சியாது துகிலத்தானகற்றி ஆடையணியாது (மாவுரிதாங்கி)

ஆழிவிக்கு

மஞ்சு மகறறு மதுமுத்தி யெனறுரைக்கும
வஞ்சமணன பாழி மதியாதே—

(இ-ள்) ஆழிவிக்கும பிறபபினிலழுத்தும அஞ்ச, (உருவம வேதனை குறிப்புபாவனை விஞ்ஞானமெனனும) பஞசகந்தங்களை அகற்றும நீககுவதே அதுமுத்தி அதுமோட்சமாகும எனறுரைக்கும் என்றுகூறும் வஞ்சமணன வஞசத்தினைவாயந்த சமணனது பாழி அவர்கோயிலை மதியாதே நினையாதே,

செஞ்சொலபுனை

யாதிமறை யோதி யதனபயனெனறு மறியா
வேதியர்சொல் மெய்யென்று மேவாதே—

(இ-ள்) செஞ்சொல்புனை மஙகளகரமான பதஙகளானிறை யப்பெற்ற ஆதிமறை பழையவேதங்களை ஓதி நனகுயாராயந்து அதன்பயன் அவ்வேதங்களின் உண்மையினில் ஒன்றும் சிறிதேனும் அறியா நிச்செயாத வேதியர் பாஞ்சராத்திராதியர் சொல் அவ

ர்கூறும் நூல்களை மெய்யென்று சத்தியமென்று மேவாதே அவற்றை வாசிக்கச்சாராதே.

ஆகியின்மேல்

உற்ற திருநீறுஞ் சிவாலயமு முள்ளத்துச்
செற்ற புலையர்பாற் செல்லாதே—

(இ-ள்.) ஆகியின்மேல் பரமேஸ்வரன் திருமேனியின்மீது உற்ற பொருந்திய திருநீறும் விபூதியினையும் சிவாலயமும் சிவபெருமானெழுந்தருளியிருக்கு மாலயத்தினையும் உள்ளத்து மனதின் கண்ணே செற்ற தியானியாது விட்ட புலையர் பாலப் பஞ்சமர்களிடத்தில் செல்லாதே சேராதே,

கற்றவர்சேர்

வேடமுடன் பூசையருண் மெய்ஞ்ஞான மில்லாத
மூடருடன் கூடி முயங்காதே—

(இ-ள்.) கற்றவர் சேர் அரிய தவத்தோடு கூடிய வேடமுடன் விபூதிருத்திராட்ச காஷாயம் பூண்ட கோலத்துடன் பூசை சிவபூசையும் அருள் திருவருளைப் பொழிகின்ற மெய்ஞ்ஞானம் சிவஞானமும் இல்லாத வாய்க்கப்பெறாத மூடருடன் மடையர்களுடன் கூடி சகித்து முயங்காதே தழுவாதே

வழித்துப் பிறப்பு தறியா தானைப்
பழித்துத் திரிபவரைப் பாராதே—

(இ-ள்.) நீட ஏககாலத்தும் அழித்து பிரமமுதல் பிபீலிகை பரியந்தமுள்ள ஆன்மகோடிகளைச் சர்வசங்கார காலத்தில் ஒழித்து பிறப்பது மறுபடியும் அச்சங்கார காரணனாலேயே உதிப்பு

தும் அறியாது இவ்வுண்மையினை யறிந்துகொள்ளாது அரனை முதலவனை பழித்து நிந்தித்துத் திரிபவரைச் சேர்ந்திருக்கின்ற பாவிகளை பாராதே முகாலோபனம் பண்ணாதே,

விழித்தருளைத்

தந்தெம்மை யாண்டருளுஞ் சம்பந்த மாமுனிவ
னந்தங் கடந்தப்பா லாயினோன்—

(இ-ள்.) விழித்த காருண்ணியமான நேத்திரங்களைத் திறந்து நிட்சித்து அருளை தனது அருட்சத்தியை தந்து என்பால் பதியவைத்து எம்மை அடியேமை ஆண்டருளும் திருவடியினிழ இறண்டறக் கலக்கச்செய்யும் சம்பந்தமாமுனிவன் முனீந்திரராயினவரும் மறைஞான சம்பந்தமூர்த்தி அந்தம் வேதாந்திகளின் முடிவினில் கடந்து அடங்காது அப்பாலாய் வேறாய் நின்றுள எழுந்தருளுபவன்,

எந்தைபிரான்

வீற்றிருக்கு மோலக்க மெய்தியடி வீழ்ந்திறைஞ்சிப்
போற்றி சயசய போற்றியென—

(இ-ள்.) எந்தை, எமது பரம பிதாவாகிய பிரான் தலைவன் வீற்றிருக்கும் எழுந்தருளியிருக்கும் ஓலக்கம் திருவோலக்கத்தினைத் தரிசித்து எய்தி (அடைந்து) சென்று அடி அவரது திருவடியில் வீழ்ந்து (சாஷ்டாங்க அஷ்டாங்க பஞ்சாங்க திரியாங்க ஏகாங்கமாக) வணங்கி இறைஞ்சி தோத்தரித்து போற்றிசயசய போற்றியென போற்றிபோற்றி சயசய போற்றியெனவாழ்த்தி

ஆர்த்தகரி

பன்றுரித்தாய் நின்பவனியாதரித்தாரெல்லோரும்
வென்மத னம்புபட வீழ்வரோ—

(இ-ள்.) ஆாதத (தாருகாவனததா அபிசார வேள்வியினின் றும்வநது) கூசசவிட்டகரி யானையை அனறு (கஙகாளவேடங கொணட) அககாலததில் உரிததாய அதனதோலேவாஙகிப்போா வையாகக கொணடாய் நின தேவரீரது பவனி (இரண்டாயிர ந்ததங்களையுடைய யானையினமீதுவரும) திருவுலாவினை ஆதரி த்தாா ஆசையுடன தரிசிததவாகள எலலோரும சிவனடியாாகள யாவரும வெனறி (அனமாககளைமயககுவதில செயததினை வாய நத மதன மன்மதனது அமபு (புட்பஙகளாலாய,) பஞசபாணங கள் பட தஙகள்மீதுபட வீழவரோ அமமனமதன் மாயையில அபபடுவரோ

நின்றிடத்து

நில்லாது செல்வ நிலையென் றுனைநீங்கிப

பொலலா நரகம புகுவரோ—

(இ-ள்) நினறிடதது ஒரேதானததில் நில்லாது என்றும் நிலை பெறறிராத செல்வம பிரபஞசவாழவினை நிலையென்று சததிய மென்வெணணி உனை தேவரீரை நீஙகி (திருவருட்கனனியமாக) பிரிந்து பொலலா தீமையாகிய நரகம நரகததினில் புகுவரோ முழுகுவரோ

பல்லாருங்

கத்துஞ் சமையக கணககிற படுவரோ

சிததம பலகாற றிகைபபரோ—

(இ-ள்) பல்லாரும முக்கூற்றுப் புறச்சமயத்தவர்கள் யாவரு ம் கத்தும் பிதற்றும சமையக்கணககில சமயக்கூட்டத்தின் படுவ ரோ அகப்படுவரோ சித்தம் மனதில் பலகால் பலதடவைதிகை ப்பரோ சந்தேகிப்பரோ.

முத்தம்

பொருத நகைமடவார் புன்கலவி யின்பம்
மருவி மயங்கி வருவரோ —

(இ-ள்.) முத்தம் முத்துக்களை, பொருத ஒத்த, நகை பற்களையுடைய மடவார் மாதர்களது புன் அற்பமாகிய கலவியின்பம் சையோக வின்பத்தினை, மருவி பொருந்தி மயங்கி மோகத்திலழுந்தி வருவரோ வாழ்ந்துவருவரோ.

இருபொழுது

நாளிருபத் தேழு நவக்கிரக மும்கலியுங்
கோளிதுவென் றெண்ணிக் குறிப்பரோ —

(இ-ள்,) இருபொழுதும் இரவும்பகலும், நாளிருபத்தேழும் இருபத்தேழு நட்சத்திரங்களும் நவக்கிரகமும் நவக்கிரகங்களும் கலியும் இடையூறினைச் செய்யும் கோளிதுவென்று கோள்களாமென்று எண்ணி நினைத்து குறிப்பரோ மனதில் மதிப்பரோ

வேளை

எரித்தவிழி யாய்நின் னின்பக் கடற்கே
தரித்து மதிமறந்த தையல —

(இ-ள்.) வேளை மன்மதனை எரித்த காமபாணகிய விழியாய்த் திருநேத்திரத்தை யுடையவனே நின் தேவரீரது இன்பக்கடற்கே சிவானந்தக் கடலினிடத்திலேயே தரித்து தங்கி மதி அறிவானது மறந்த திருவருளிலிருந்த தையல நாயகியின்.

வருத்தமெலாந்

தீரவென வுரைத்துச் செங்கமலப் பூந்திருத்தா
டாரவெனப் பலகாற் றொழுதிறைஞ்சி —

(இ-ள்,) வருந்தமெல்லாம் சோகமனைத்தும் தீரவுந் தீர்த்தருளு வாய் எனவுரைத்து என் றிருச்செவியிலோதி செங்கமலம் சிவந் த தாமரை யினையொத்த பூந்திருத்தாள அழகிய திருவடிகளை தா ராயெனத் தந்தருளுவாயென பல்கால அடிக்கடி தாழ்ந்து வணங் கி இறைஞ்சி தோத்தரித்து (திருவுளமிசையாரேல,)

ஏராரும்

பூங்கொன்றை வாங்கிப் புகழ்ந்துபுரி நெஞ்சமே
யீங்கொன்ற வாரா யினி—

(இ-ள்,) ஏராரும் அழகு பொருந்திய பூங்கொன்றை (சிவப் ரணவாகாரமான கொன்றைப் பூமாலையினை வாங் கிப் பெற்றுக்கொள்ள புகழ்ந்துபுரி வாழ்த்துதலைசெய்து நெஞ்ச மே மனமே ஈங்கு இவ்விடத்து ஒன்ற ஒன்னிடத்துப் பொருந்த இனி இனிமேல், வாராய் வரக்கடவாய்.

வெண்பா.

வெம்பும் பிறவியலை வீழாமல் வீடளித்த
சம்பந்த மாமுனிவ னாரைவாங்கி—யம்புந்தும்
வஞ்சமே வும்விழியார் வல்வினையெல் லாமகல
நெஞ்சமே வாராய் நினைந்து.

நெஞ்சுவிடு தூது

மூலமும்-உரையும்.

முற்றுப்பெற்றது

—()—